[1967 நவம்பர் 27

திரு. கே. விநயகம் : தஞ்சை மாவட்டத்திலுள்ள வேளாங்கண்ணிக்கு அருகாமையில் இருக்கும் லிஃப்ட் இர்ரிகேஷன் ஸ்கீமை நாங்கள் நேரடியாகப் போய்ப் பார்த்தோம். அங்கிருக்கும் விவசாயிகள், அந்த லிஃப்ட் இர்ரிகேஷன் மூலமாகத் தரப்படுகிற தண்ணீர் உப்புத் தண்ணீராக இருப்பதால், நெற்பயிருக்கு அது பயன்படாது என்று சொல்லி, அதை மறுத்து, வேண்டாம் என்று சொல்லுகிறார்கள். என்றாலும், அவர்களை நிர்ப்பந்தப்படுத்தி, நாங்கள் கீழேயிருந்து தண்ணீர் எடுத்துவிட்டோம்; ஆகவே அதைப் பயன்படுத்தித்தான் தீரவேண்டும் என்று திணிப்பதை விடுத்து, அவர்களுக்கு இதிலேயிருந்து விதிவிலக்குத் தர முடியுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : திணிப்பதை எப்போதுமே இந்த அரசாங்கம் ஏற்காது. அது மாத்திரம் அல்ல. அங்கிருந்த குறைபாட்டை இந்த அரசாங்கம் போக்குவதற்குப் பல முயற்சிகள் எடுத்து, ஓரளவு போக்கியும் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தஞ்சை மாவட்டத்தை யொட்டிய துணை வினாவை மாண்புமிகு உறுப்பினர் திரு. சீமைச்சாமி அவர்கள் கேட்கலாம்.

திரு. கரு. சீமைச்சாமி : இந்த மின் இறைவைப் பாசனத் திட்டம் நல்ல திட்டமாகும். இதை வைகையாற்றுப் படுகைகளில் எங்கெங்கு வசதிகள் இருக்கின்றனவோ அங்கே விஸ்தரிக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : எங்கெங்கு தேவை என்று கனம் உறுப்பினர் குறிப்பிட்டு, அதற்குத் தனியாகக் கேள்வி கேட்பாரானால், விவரம் சேகரித்துத் தர முடியும்.

Madras—Tindicanam Bus

* 458 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether it is a fact that the Government bus plying between Madras and Tindivanam was stopped for some time past;

(*b*) if so, the reasons therefor; and

(*c*) whether it has again been put into service?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) சென்னைக்கும் திண்டிவனத்திற்கும் இடையே தமிழக அரசுப் போக்குவரத்து பஸ் 1-10-1965 முதல் 8-11-1965 வரை, 39 நாட்கள் விடப்பட்டு, பிறகு நிறுத்தப்பட்டது.

(ஆ) போதுமான உபரி பஸ்கள் இல்லை என்று அப்போது காரணம் கூறப்பட்டது.

(இ) மறுபடியும் இப்பொழுது சென்னை-திண்டிவனம் அரசினர் பஸ் விடப்படுகிறது.

1967 நவம்பர் 27]

திரு. கே. விநாயகம்: சென்னையிலிருந்து திண்டிவனம் போகிற பஸ்ஸைப் பொறுத்தவரையில், ஒரு மாதச் செலவு எவ்வளவு, ஒரு மாத வருவாய் எவ்வளவு என்று கணக்கிட்டு, இரண்டையும் ஒப்பிட்டுப் பார்த்ததில், அரசாங்கத்திற்கு அதன் மூலம் நஷ்டம் வருகிறதா, லாபம் வருகிறதா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இன்னும் அந்தக் கணக்கு சரிவரப் பார்க்கப்படவில்லை. ஆனால், நஷ்டம் வருவதாகக் கூற முடியாது.

திரு. க. இராமமூர்த்தி : இப்பொழுது அதிகப்படியான பஸ்கள் திண்டிவனத்திற்கு வருவதன் காரணமாக, அரசாங்க பஸ் நிலையத்தை விஸ்தரிப்பதற்கு அரசாங்கத்திடம் திட்டம் இருக்கிறதா? விஸ்தரிக்க முன்வருமா ? அத்துடன், பஸ் ஸ்டாண்டில் சிற்றுண்டி விடுதிக்கும் ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அரசாங்க சார்பில் தனியாக பஸ் நிலையங்கள் நிறுவுகிற நேரத்தில், ஏற்கனவே நகராட்சியின் சார்பிலே இருக்கும் பஸ் நிலையங்களுக்கும் அதிகத் தொல்லை இருக்கக்கூடாது என்று கொள்கை வகுக்கப்பட்டு, அதன்படி ஏற்பாடுகள் செய்ய முடியுமா என்று கவனிக்குமாறு டைரக்டர் அவர்களிடம் கேட்கப்பட்டிருக்கிறது. அதற்கான தகவல் கிடைத்த பிறகு அதுபற்றி யோசிக்கப்படும்.

திரு. வை. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, அரசாங்க பஸ்களைப் பொறுத்த வரையில், ஒரு புது பஸ் விடப்பட்ட நாளிலிருந்து அது எத்தனை ஆண்டுகள் வரை ஓடுவதற்கு லாயக்குள்ளது என்று காலம் ஏதாவது நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : முன்பிருந்த காலகட்டத்தை விட இப்பொழுது ஓராண்டு அதிகமாகக் காலகட்டம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

திரு. செஞ்சி வெ. முனுசாமி : சென்னையிலிருந்து திண்டிவனம் வரையில் அரசினர் பஸ் விட்ட காரணத்தால் தனியார் பஸ் கட்டணம் குறைந்திருக்கிறது. அதேபோன்று செஞ்சிக்கும் திருவண்ணாமலைக்கும் சென்னையிலிருந்து அரசாங்க பஸ் விட அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : உரிய நேரத்தில் யோசிக்கப்படும்.

திரு. கொளத்தூர் கோதண்டம் : திண்டிவனத்திற்கும் சென்னைக்கும் இடையே விடப்பட்டிருந்த பஸ்கள், போதுமான பஸ்கள் இல்லாத காரணத்தால், நிறுத்தப்பட்டன என்று சொல்லப்படுகிறது. ஆனால், தனிப்பட்ட முதலாளிகளின் வருவாய் பாதிக்கப்படுகிறது என்று முன்னால் இருந்த அமைச்சர்களிடம் சொன்ன காரணத்தால், அப்பொழுது அரசாங்க பஸ்கள் நிறுத்தப்பட்டன என்று சொல்லப்படுவது அமைச்சருக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பழைய விஷயங்களைக் கிளறத் தேவை இல்லை என்று கருதுகிறேன்.